# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த (உயர் தரம்) பயிற்சிப் பரீட்சை – 2020
## தரம் 13

**பாட இலக்கம் 21** **பொருளியல்**

## புள்ளி வழங்கும் திட்டம்
## பகுதி 1

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 2 | 11. 2 | 21. 1 | 31. 5 | 41. 3 |
| 2. 3 | 12. 4 | 22. 3 | 32. 3 | 42. 1 |
| 3. 2 | 13. 4 | 23. 1 | 33. 4 | 43. 2 |
| 4. 1 | 14. 4 | 24. 5 | 34. 4 | 44. 1 |
| 5. 5 | 15. 2 | 25. 1 | 35. 2 | 45. 2 |
| 6. 3 | 16. 3 | 26. 3 | 36. 1 | 46. 1 |
| 7. 4 | 17. 2 | 27. 1 | 37. 2 | 47. 3 |
| 8. 4 | 18. 4 | 28. 4 | 38. 5 | 48. 3 |
| 9. 2 | 19. 5 | 29. 1 | 39. 3 | 49. 4 |
| 10. 5 | 20. 2 | 30. 4 | 40. 2 | 50. 2 |

## பகுதி 11

1. அ. பல்வேறு மாற்றுத் தெரிவுகள் உள்ள நிலையில் ஒரு அதிசிறந்த தெரிவினை மேற்கொள்ளும் போது அதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதி அமையச் செலவாகும். (2 புள்ளிகள்)

அமையச் செலவு மெய்ச் செலவு என்றும், பொருளியல் செலவு என்றும் அழைக்கப்படும். இது நிதி ரீதியான செலவு அல்ல. ஒரு மெய் ரீதியான செலவாவாகும். இது நபர்களுக்கு நபர் வேறுபடும். அமையச் செலவின் பெறுமதி நேர்க்கணிய பெறுமதியைக் கொண்டதாக காணப்படும். (2 புள்ளிகள்)

**ஆ. வழிகாட்டல் / சமிக்ஞை வழங்கல்.**

- உற்பத்தியாளர் எதனை, எந்தளவில், எவ்வாறு, யாருக்காக உற்பத்தி செய்தல் எனும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண விலை வழிகாட்டுகிறது.

**தூண்டல்/ ஊக்குவிப்பு.**

- உற்பத்தியாளர்கள் இலாபத்தை உச்சப்படுத்தவும் நுகர்வோர் பயனை உச்சப் படுத்தவும் விலையானது அழைப்பாகவும், எச்சரிக்கையாகவும் தூண்டல்களை வழங்குகின்றது.

**பங்கீட்டுத் தொழிற்பாடு.**

- அருமையான வழங்களை உற்பத்திகளிடையே பங்கிடவும் அருமையான பொருட்கள் சேவைகளை பங்கிடவும் விலையானது தொழிற்படுகின்றது. (4 புள்ளிகள்)

இ.


- கேள்வியை மதிப்பிடல் சாத்தியமற்றது.
- தீர்மானம் எடுத்தலில் தாமதம்.
- திட்டமிடலிலும் தொடர்பாடலிலும் காணப்படும் குறைபாடுகள்.
- தரக்கட்டுப்பாடுகள் வீழ்ச்சியடைதல்.
- போதிய ஊக்குவிப்புமின்மை.
- அரசியல் தலையீடுகளும் ஊழல்களும். (4 புள்ளிகள்)


ஈ. மையத்தானத்திற்கு குழிவான வளையி.
அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு.

**காரணங்கள்.**

- வளங்களின் பூரண பதிலீடற்ற தன்மை.
- தொழில் நுட்பங்கள் இரு வேறுபட்ட உற்பத்திக்கும் சமமற்றவை. (4 புள்ளிகள்)

உ.




(4 புள்ளிகள்)

2. அ. குறிப்பிட்ட பண்டத்தின் விலை
தொடர்புடைய பண்டங்களின் விலை
நுகர்வோனின் வருமானம்
நுகர்வோனின் சுவை
எதிர்பார்க்கை (4 புள்ளிகள்)

**ஆ. சாதாரண பொருள்**

நுகர்வோரின் வருமான மாற்றத்திற்கும் கேள்வி மாற்றத்திற்குமிடையே நேர்க்கணிய தொடர்பு காணப்படும்.

**இழிவுப் பொருள்**

நுகர்வோரின் வருமான மாற்றத்திற்கும் கேள்வி மாற்றத்திற்குமிடையே எதிர்க் கணிய தொடர்பு காணப்படும்.

**கிபன் பொருள்**

விலை மாற்றத்திற்கும் கேள்வி தொகை மாற்றத்திற்குமிடையே நேர்க்கணிய தொடர்பு காணப்படும். (4 புள்ளிகள்)

இ. விலைசார் கேள்வி நெகிழ்ச்சியற்றிருக்கும்போது
ஒருமை விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின்போது
முடிவிலி விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின்போது
பூச்சிய விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின்போது. (4 புள்ளிகள்)

ஈ.

I. 1. 14 ரூபா, 72 அலகுகள். (2 புள்ளிகள்)

II. 0.4 (2 புள்ளிகள்)

III. நுகர்வோனின் வருமானம் அதிகரித்தல்.
பிரதியீட்டுப் பண்டத்தின் விலை அதிகரித்தல்.
நிரப்புப் பண்டத்தின் விலை குறைவடைதல்.

சுவை சாதகமாக மாறுதல். (4 புள்ளிகள்)

3. அ.

- பண்டமானது அதிக பதிலீடுகளை கொண்டிருக்கும்போது
- பண்டமானது ஆடம்பரத் தன்மையினைக் கொண்டிருக்கும்போது.
- குறுகிய அடிப்படையில் வரையறுக்கப்படும் பண்டமாக இருத்தல்.
- நுகர்வோனின் வருமானத்தில் கூடிய செலவுப் பங்கினை வகிக்கும் பண்டமாக இருத்தல்.
- பல தேவைகளுக்குப் பயன்படும் பண்டமாக இருத்தல். (4 புள்ளிகள்)

ஆ.

- மிகை நிரம்பல் நிலையொன்று தோன்றும்.
- ஊழியச் சந்தையில் குறைந்தபட்ச விலை காரணமாக வேலையின்மை தோன்றலாம்.
- மிகை முதலீட்டு நிலையொன்று தோன்றலாம்.
- குறைந்தபட்ச விலையினை பெயரளவு விலையாகக் கொண்டு கழிவுகளை வழங்கி கொள்வனவாளருக்கு பொருட்களை நிரம்பல் செய்ய நேரிடலாம். (4 புள்ளிகள்)

இ.

I. சமநிலை விலை 30 ரூபா, சமநிலைத் தொகை 300 அலகுகள்.
(2 புள்ளிகள்)

II. மிகை நிரம்பல் 500 – 100 = 400 அலகுகள். (2 புள்ளிகள்)

III. $\frac{(60 - 50)x100}{2} = 500$ $\frac{(50 - 0)\ x500}{2} = 12500$

(4 புள்ளிகள்)

IV. 16000 (4 புள்ளிகள்)

4. அ. தற்போது தொழிலில் நிலைத்திருக்க முயற்சியாளன் எதிர்நோக்கும் குறைந்தபட்ச வெகுமதிக்கும் மேலதிகமாக கிடைக்கும் வருமானமே பொருளியல் இலாபமாகும். இதன்போது மொத்த செலவிலும் பார்க்க மொத்த வருமானம் உயர்வாக காணப்படும். இதனால் மொத்தச் செலவிலும் பார்க்க கூடுதலாக காணப்படும் வருமானம் பொருளியல் இலாபமாகும். எனவே மொத்தச் செலவினுள் பொருளியல் இலாபம் உள்ளடங்கமாட்டாது. (4 புள்ளிகள்)

ஆ. குறுங்காலத்தில் தனது வெளியீட்டினை ஒரு நிறுவனம் அதிகரிக்கும்போது சராசரி மாறும் செலவு வளையியும், சராசரி மொத்தச் செலவு வளையியும் ஒன்றையொன்று நெருங்கிச் செல்லும். சராசரி மாறும் செலவுக்கும் , சராசரி மொத்தச் செலவுக்கும் இடையிலான வேறுபாடு சராசரி நிலையான செலவாகும்.

உற்பத்தியை அதிகரிக்கும்போது சராசரி நிலையான செலவு குறைவடைய அதன் முக்கியத்துவம் குறைவடையும். இதனால் சராசரி மொத்தச் செலவானது சராசரி மாறும் செலவினை நெருங்கிச் செல்லும். இதனால் நிலையான செலவின் முக்கியத்தவம் குறைவடைகின்றது. எனவே இரு கோடுகளுக்கும் இடையிலான இடைவெளி குறைவடைந்து செல்லும். (4 புள்ளிகள்)

இ. சமநிலையின்போது MR = MC யாகக் காணப்படும். இதன்போது விலை 100 ரூபா. ஆனால் சராசரி மாறும் செலவ 110 ரூபா. எனவே விலையானது சராசரி மாறும் செலவைவிட குறைவாக


காணப்படுகின்றது. இதன் காரணமாக நிறுவனம் தொடர்ந்தும் உற்பத்தியில் ஈடுபட்டால் நிலையான செலவு முழுவதையும் பொறுப்பேற்பதுடன் மாறும் செலவிலும் ஒரு பகுதியைப் பொறுப்பேற்க வேண்டியேற்படும். இதனால் நிறுவனம் தொழிலிருந்து வெளியேறுவது சிறந்ததாகும்.
(4 புள்ளிகள்)

ஈ.

- அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் காணப்படும்.
- பிரவேச சுதந்திரம் காணப்படும்.
- பொருள் வேறுபாடு காணப்படும்.
- விளம்பரம் அதிகளவில் இடம்பெறும். (4 புள்ளிகள்)

உ. உற்பத்திக் காரணியொன்று பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த கொடுப்பனவுக்கு மேலாக உழைத்துக் கொள்ளும் வருமானம் சிக்கன வாடகையாகும்.
(2 புள்ளிகள்)

இக்காரணியின் நிரம்பல் நெகிழ்ச்சி பூச்சியமாக அமையும் போது உழைக்கும் வருமானம் சிக்கன வாடகையாக அமையும்.




(விளக்கம்1, படம் 1)

5. அ. பொருளாதாரப் பின்னடைவு என்பது ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி குறைவடைவதனால் உற்பத்தி வீழ்ச்சியடைதலைக் குறிக்கும் பொருளாதாரப் பின்னடைவு ஒரு குறுங்கால நிலமையாகும். இதன்போது வேலையின்மை அதிகரிக்கும். முதலீடு குறைவடையும்.

பொருளாதாரப் பின்னடைவின் நீண்டகால நிலமை பொருளாதார மந்தமாகும். இதன்போது உற்பத்தி பெருமளவால் வீழ்ச்சியடைவதுடன் வேலையின்மையும் தீவிரமாகக் காணப்படும். முதலீடுகள் மிகவும் கீழ்மட்டத்தில் காணப்படும். (4 புள்ளிகள்)

**ஆ. உற்பத்தி எல்லையில் உள்ளடங்கும் விடயங்கள்.**

- சந்தையில் விற்பனையாகும் அனைத்து பொருட்கள் சேவைகளும்.
- உற்பத்தி செய்த நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய நிறுவன அலகுகளுக்காக உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்கள் சேவைகளும்.
- தங்களுடைய இறுதி நுகர்வு நோக்கத்திற்காகவோ, மூலதனத்திரட்டலுக்காகவோ உற்பத்தி செய்து அதன் உற்பத்தியாளர் மூலம் தமக்காக வைத்துக் கொண்ட அனைத்துப் பொருட்களும்.
- தம்மிடமுள்ள தாம் குடியிருக்கும் வீடுகளினால் பெற்றுத் தரப்படும் வதிவிட சேவைகள்.
- சம்பளம் பெறும் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படும் குடும்ப வேலைகளும் தனிப்பட்ட சேவைகளும். (4 புள்ளிகள்)

**இ. தன்னிச்சையான நுகர்வு**

- பொருளாதாரத்தில் வருமானத்தின் செல்வாக்குக்கு உட்படாத நுகர்வு
- வருமானம் பூச்சியமாக உள்ளபோது இந்நுகர்வு காணப்படும்.
- வாழ்க்கையை கொண்டு செல்வதற்கான மிகக் குறைந்த நுகர்வு மட்டத்தைக் குறிக்கும்.
- இதன்போது சேமிப்பு எதிர்க்கணியமாக காணப்படும்.

(1 புள்ளி)

**தூண்டப்பட்ட நுகர்வு.**

- தன்னிச்சையான நுகர்வைவிட மேலதிகமாகக் காணப்படும்.
- வருமானம் அதிகரிக்கும்போது இதுவும் அதிகரிக்கும்.

(1 புள்ளி)

ஈ. 1. இறக்குமதி 350 (2 புள்ளிகள்)
2. மொத்த உள்நாட்டு செலவு 1700 (2 புள்ளிகள்)
3. மொத்த தேசிய உற்பத்தி 1750 (1 புள்ளி)

உ. 1. MPC 0.75 (2 புள்ளிகள்)
2. 2000 அல் அதிகரிக்கும். (1 புள்ளி)
3. 1750 அல் அதிகரிக்கும். (2 புள்ளிகள்)

6. அ. பரிமாற்றூடகம்
கணக்கீட்டலகு.
பெறுமானத்திரட்டு
பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளுக்கான நியமம். (2 புள்ளிகள்)

ஆ. நாட்டின் பணநிரம்பலுக்கு அடிப்படையாகக் காணப்படும் பணவியல் சொத்துக்கள் நாணயத்தளத் தளம் எனப்படும். இது நாணய அதிகாரிகளின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட நிதிப் பொறுப்புக்களாகும். (2 புள்ளிகள்)

**நாணயத்தளத்தின் உள்ளடக்கம்.**

- பொதுமக்களிடம் உள்ள நாணயம்.
- வணிக வங்கியிலுள்ள காசு.
- மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கிகளின் வைப்புக்கள். (2 புள்ளிகள்)

இ. 1. நாணயத்தளம்

- மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்.
- மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்.
- மத்திய வங்கியின் தேறிய ஏனைய சொத்துக்கள்.

(2 பள்ளிகள்)

2. பணப்பெருக்கி.

- பரிமாற்றத்திற்காக பொதுமக்கள் பணத்தை பயன்படுத்துவதற்கான விருப்பம்.
- சட்டரீதியான ஒதுக்கு வீதம்.
- மிகை ஒதுக்குகள். (2 புள்ளிகள்)

ஈ. ஏனையவை மாறாத நிலையில் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பால் விலைமட்டம் அதிகரித்துச் செல்லுதல் கேள்வித்தூண்டல் பணவீக்கம் எனப்படும். இதற்கான காரணங்கள்.

- தனியார் நுகர்வு அதிகரித்தல்

- முதலீடுகள் அதிகரித்தல்.
- அரச செலவு அதிகரித்தல். (2 புள்ளிகள்)

கேள்வியில் மாற்றம் ஏற்படாதபோது உற்பத்திச் செலவுகூடி நிரம்பல் குறைவடைவதால் விலையில் ஏற்படும் அதிகரிப்பு செலவுத்தூண்டல் பணவீக்கம் எனப்படும். இதற்கான காரணங்கள்.

- கூலி உயர்வடைதல்
- மூலப்பொருட்களின் விலையேற்றம். (2 புள்ளிகள்)

உ. 1. 1100 (2 புள்ளிகள்)

2. பணப்பெருக்கி $= \dfrac{\text{நாணயத்தளம்}}{\text{பணநிரம்பல்.}} = \dfrac{1100}{1100} = 1$

(2 புள்ளிகள்)

3. 2600 (2 புள்ளிகள்)

7. அ.

- பணக்கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.
- நாணய மாற்றுவீதக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
- சட்டமுறைப் பண வெளியீடு.
- உத்தியோக பூர்வ வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம்.
- முதல்நிலை வணிகர்களுக்கு அனுபமதிப் பத்திரம் வழங்கல், கண்காணிப்பு, மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடல். (4 புள்ளிகள்)

ஆ. பணக்கொள்கை என்றால் பொருளாதார உறுதிப்பாடு விலை உறுதிப்பாடு, நிதியியல் முறையின் உறுதிப்பாடு என்பவற்றை அடைந்து கொள்வதற்கு வட்டி விகிதம், பணநிரம்பல், என்பவற்றில் தாக்கம் செலுத்தும் வகையில் பணக்கருவிகளை கையாளும் செயற்பாடு ஆகும். (2 புள்ளிகள்)

பணக்கொள்கை கருவிகளின் பிரிவுகள்.

தொகை ரீதியான பணக்கொள்கை கருவிகள்

பண்பு ரீதியான பணக்கொள்கை கருவிகள். (2 புள்ளிகள்)

இ. மீளவும் கொள்வனவு செய்தல் என்ற இணக்கத்தின்படி மத்திய வங்கியிடமுள்ள உண்டியல்களைக் பணச்சந்தையில் விற்பனை செய்தல் துணைதீர் வைப்பு வசதி என அழைக்கப்படும். பணச்சந்தையில் மேலதிக திரவத்தன்மை காணப்படும்போது இந் நடவடிக்கையின் மூலம் அதனைக் குறைத்துக்கொள்ள முடியும். இதன் மூலம் அழைப்புக் கடன் சந்தையில் வட்டி வீதத்தின் கீழ் எல்லை வரையறுக்கப்படும்.

(3 புள்ளிகள்)

மீளவும் விற்பனை செய்தல் என்ற இணக்கத்தின்படி மத்திய வங்கி பணச் சந்தையில் உண்டியல்களைக் கொள்வனவு செய்தல் துணைதீர் கடன் வசதி என அழைக்கப்படும். பணச்சந்தையில் திரவத்தன்மை பற்றாக்குறை காணப்படும்போது இந் நடவடிக்கையின் மூலம் அதனைக் குறைத்துக்கொள்ள முடியும். இதன் மூலம் அழைப்புக் கடன் சந்தையில் வட்டி வீதத்தின் மேல் எல்லை வரையறுக்கப்படும். (3 புள்ளிகள்)

ஈ. மூலதனச் சந்தையின் உப சந்தைகள்.

- திறைசேரி முறிகள் சந்தை.
- கம்பனி முறிச்சந்தை
- பங்குச் சந்தை. (3 புள்ளிகள்)

**திறைசேரி முறிகள் சந்தை**

நடுத்தர, நீண்டகால அடிப்படையில் அரசு கடன் பெறுவதற்குப் பயன்படுத்தும் பிரதான கருவி திறைசேரி முறிகள் என அழைக்கப்படும். இவை பரிமாற்றப்படும் சந்தை முதலாம்தரச் சந்தை, இரண்டாம் தரச் சந்தை என இரு பிரிவுகளைக் கொண்டது.

கம்பனி முறிச்சந்தை என்பது தனியார் கம்பனிகளால் நடுத்தர, நீண்டகால நிதியினை பெற்றுக் கொள்வதற்காக கம்பனி முறிகளை பரிமாற்றும் சந்தையாகும்.

பங்குச் சந்தை என்பது பொதுமக்களுக்கு பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் வர்த்தகக் கம்பனிகள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அவசியமான மூலதனத்தை பெற்றுக்கொள்கின்ற சந்தையாகும். (3 புள்ளிகள்)

**8. அ. வணிக வங்கியின் முதனிலை ஒதுக்குகள்.**

- கையிலுள்ள பணம்
- மத்திய வங்கியிடமிருந்து வரவேண்டிய மீதி
- உள்நாட்டு வங்கிகளிடமிருந்து வரவேண்டிய மீதி
- திரட்சியடையும் பண மீதி
- கையிலுள்ளதும், வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து வரவேண்டிய வெளிநாட்டுப் பணமீதி.

(4 புள்ளிகள்)

ஆ. வணிக வங்கிகள் தமது மிகை ஒதுக்குகளை கடனாக வழங்குவதன் மூலம் காணப்பட்ட அளவினைவிட பல மடங்கு வைப்புகளை உருவாக்குதல் பண ஆக்கம் எனப்படும். (2 புள்ளிகள்)

எடுகோள்கள்.

- வங்கிகள் மிகை ஒதுக்குகளை கொண்டிருக்கவில்லை.
- ஆரம்ப வைப்பு செய்யப்பட்ட பின்னர் வங்கியமைப்புக்கு புதிதாக பணத்தின் உள்வருகையோ வங்கி முறையிலிருந்து வெளியே பணச் செலுத்தல்களோ நடைபெறுவதில்லை.
- ஒரு வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் இன்னுமொரு வங்கிக்கு வைப்பாக செல்கிறது.

(2 புள்ளிகள்)

இ. 1. காசொதுக்கு வீதம் 5% (2 புள்ளிகள்)

2. வைப்பாக்க பெருக்கி 1/0.05 = 20 (2 புள்ளிகள்)

3. 5000 பில்லியன். (2 புள்ளிகள்)

4. பணநிரம்பல் 12500 பில்லியன். (2 புள்ளிகள்)

5 (2 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 10000 | ஒதுக்கு | 500 |
| | | கடன்கள் | 9500 |
| | 10000 | | 10000 |

6.

- மிகை ஒதுக்குகளை வங்கிகள் தம்மிடம் வைத்திருக்க விரும்புதல்
- வங்கிக்கடனுக்கான கேள்வி குறைவடைதல்.
- வங்கி முறைக்கு வெளியேயான பணப்பாய்ச்சல். (2 புள்ளிகள்)

9. அ. சமூகநலன் கருதி அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வதில் விலைப்


பொறிமுறையானது தோல்வியடைதலைக் குறிக்கும். (2 புள்ளிகள்)

- வளஒதுக்கீட்டில் வினைத்திறன் இன்மை.
- பேரினப் பொருளாதார உறுதியின்மை.
- வருமானப் பங்கிட்டில் சமமின்மை. (2 புள்ளிகள்)

ஆ. ஏதாவது ஒரு உற்பத்தி செயற்பாட்டின் காரணமாக அதனுடன் நேரடியாக தொடர்புபடாத மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் பிரதிகூலம் உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவாகும். (2 புள்ளிகள்)
உ-ம்

1. உருளைக் கிழங்கு உற்பத்தியால் நீர் நிலையங்களில் படியும் சேற்று நீரின் காரணமாக சூழல் மாசடைதல்.
2. விவசாய பயிர்களுக்கு கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதால் சுற்றாடல் மாசடைதல். (2 புள்ளிகள்)

இ.




(2 புள்ளிகள்)

உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் காணப்படும்போது சமூகச் செலவு தனியார் செலவைவிட அதிகமாகக் காணப்படும். இதன் விளைவாக தாராள சந்தைச் சமநிலையில் சந்தை வெளியீடானது சமூகரீயான உத்தம வெளியீட்டைவிட அதிகரித்துக் காணப்படும். பொருளானது $Q - Q1$ அளவினால் அளவுக்கதிகமாக உற்பத்தி செய்யப்படும். (2 புள்ளிகள்)

ஈ. அரச தோல்வி என்பது பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையீட்டை மேற்கொள்வதனால் பல்வேறு வடிவங்களில் வினைத்திறனின்மைகளும் சமமின்மைகளும் தோன்றுவது ஆகும். (2 புள்ளிகள்)

- அரசியல் சுயநலத் தன்மை.
- நேர்மையற்ற தன்மைகளின் விளைவுகள்.
- அரசியல் மயமாக்கல்.
- அதிகாரவாதம்.
- ஊழல்களும் மோசடிகளும்.
- இறுக்கத்தன்மை. (2 புள்ளிகள்)

உ.

- வரி விதிப்பு
- அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக் கொள்கையை செயற்படுத்துதல்.
- தண்டப்பணம் அறவிடப்படல்.
- தனியாருக்கு ஆலோசனை வழிகாட்டல்கள் மேற்கொள்ளல்.

(2 புள்ளிகள்)

**10. அ. வரி அறவிடுதலின் தத்துவங்கள்.**

- நியாயத்துவம்
- சிக்கனத்தன்மை.

- இலகுத்தன்மை
- நிச்சயத்தன்மை.
- வினைத்திறனான தன்மை
- நெகிழ்வுத்தன்மை.
- அனுகூலத்தன்மை. (4 புள்ளிகள்)

**ஆ. வரிவிதித்தலின் பொருளாதார பாதிப்புக்கள்.**

- சேமிப்பு, முதலீடுகள் பாதிக்கப்படும்.
- உற்பத்தியாளர் உற்பத்தியைக் குறைப்பர்.
- நுகர்வோரது செலவிடத்தக்க வருமானம் குறைவடைந்து நுகர்வு குறைவடையும்.
- விலைமட்டம் உயர்வடையும்
- சர்வதேச வர்த்தககம் பாதிக்கப்படும். (4புள்ளிகள்)

இ.

- உயர்ந்த கேள்வி நிறுவனங்கள் வெளியீட்டை விரிவாக்குவதை ஊக்குவிக்கும்.
- கல்விமீதான செலவு அதிகரிப்பு ஊழிய வினைத்திறனை அதிகரிக்கச் செய்யும். இதனால் சாத்தியவெளியீடு அதிகரிக்கும்
- முதலீடு அதிகரிப்பு வெளியீட்டை அதிகரிக்கச் செய்யும்.
- நவீன தொழில்நுட்பம் சாத்திய வெளியீட்டை அதிகரிக்கச் செய்யும்.
- அரசு வழங்கும் மானியங்கள் வெளியீட்டை அதிகரிக்கச் செய்யும்.
- வெளியீட்டு அதிகரிப்பு ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்யும். (4 புள்ளிகள்)

ஈ. கொடை உள்ளடங்கலான அரசின் மொத்த வருமானத்திலிந்து அரசின் மொத்தச் செலவினத்தைக் கழிக்க வருவது முழு மொத்த மீதியாகும்.

முழுமொத்த மீதி = கொடை உள்ளடங்கலான அரசின் வருமானம் - அரசின் மொத்தச் மொத்தச் செலவுகள் (2 புள்ளிகள்)

முழுமொத்த மீதியிலிருந்து வட்டிக் கொடுப்பனவை நீக்க வருவது முதன்மைக் கணக்கு மீதியாகும்

முதன்மைக் கணக்கு மீதி = முழு மொத்த மீதி – வட்டிக் கொடுப்பனவு.

(2 புள்ளிகள்)

உ.

- பொருட்கள் சேவைகளுக்கான கொடுப்பனவில் பெரும்பகுதி ஊழியர்களுக்கான கொடுப்பனவு 31% மாக காணப்படுகிறது.
- நடைமுறைச் செலவில் 38% வட்டிக் கொடுப்பனவுக்கு வழங்கப்படுகிறது.
- நடைமுறைச் செலவில் 22% நடப்பு மாற்றல்களுக்கு வழங்கப்படுகிறது.

(4 புள்ளிகள்)